50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை இயங்கி வருவதாலும் ஒரு மருத்துவமனை துவங்குவதற்குரிய தொழிலாளர் எண்ணிக்கை திருத்தங்கலில் இல்லாமையாலும் திருத்தங்கலில் படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவமனை கட்ட இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனேயே சிவகாசியில் மாபெரும் வெடி விபத்து பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்டு, கிட்டத்தட்ட 40 உயிரினங்கள் பலி ஏற்படும் ஒரு நிலைமை ஏற்பட்டது. அந்தக் கொடூரமான வெடி விபத்துக்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அந்த வெடி விபத்திலே இறந்ததற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், தீக்காய விபத்துச் சிகிச்சைப் பிரிவு இல்லாததுதான் ஆகும். எனவே, அந்தத் தீக்காயப் பிரிவானது ஸ்டெர்லைஸ்ட் ஆக இருக்க வேண்டும். அதையாவது தொழிலாளர் நலக்காப்பீட்டு மருத்துவமனையாகிய திருத்தங்கலில் அமைத்துத் தரப்படுமா? படுக்கை அறையானது ஏ.சி. பண்ணப்பட்டு திருத்தங்கலில் — ட்வின் சிட்டியாக இருக்கும் திருத்தங்கல் நகரில்—அது அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிவகாசியிலே 50 படுக்கைகள் கொண்ட ஈட்டுறுதி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கோருகிற ஆலோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 449. திரு. தே. ஜனார்தனன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

449—

சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஒரே மாதிரியான பணி விதிகள்.

*5302 திரு. தே. ஜனார்தனன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான பணி விதிமுறைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS

1992 ஏப்ரல் 2]

(ஆ) ஆம் எனில், தனியார் சர்க்கரை ஆலைகளுக்கும் இவ்விதி அமல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சர்க்கரை ஆலையிலும், கூட்டுறவு சர்க்கரை ஆலையிலும் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு மாத ஊதியம், ஓய்வு பெறும் வயது இவற்றில் பெரும் வித்தியாசம் உள்ளது. இதனை அரசு அறியுமா? ஒரேமாதிரியான பணி விதிமுறைகளை ஏற்படுத்த அடுத்த ஆண்டிலாவது அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1946 ஆம் ஆண்டு தொழில் வேலைகள் நிலை ஆணைகள் சட்டம் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுடைய பணி நிலைகள் நிலையாணைகள் வடிவில் வரையறை செய்யுமாறு நிறுவன உரிமையாளர்களைக் கேட்டுக் கொள்ள வகை செய்கிறது. மைய அரசு கொண்டு வந்த இந்த தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் மைய மற்றும் மாநில விதிகள் அமைக்கப்பட்டு உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 450, திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

450—

வழக்கறிஞர்களுக்கு வீட்டுவசதி வாரியம் மூலம் வீட்டுமனை.

*5909 திரு. சி. ஞானசேகரன்:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகம் முழுவதும் உள்ள வழக்கறிஞர்களுக்கு வீட்டு வசதி வாரியம் மூலம் வீட்டுமனை அல்லது கட்டிய வீடுகளை ஒதுக்கித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,